*(அரசாங்க/ பகுதியளவு அரசாங்க ஊழியர்கள்/வெளியார்)* முடிவுத் திகதி – *2026.09.17*

# போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் கீழ் செயல்படுத்தப்படும் பதுளை-செங்கலடி வீதி அபிவிருத்தித் திட்டத்தில் , பின்வரும் பதவிகளுக்காக இலங்கையின் அனைத்து குடிமக்களிடமிருந்தும் , அரசாங்க மற்றும் பகுதி அரசாங்க அதிகாரிகள் உட்பட, விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இந்த நியமனங்கள் நிதி அமைச்சினால் 2026.03.28 ஆந் திகதி வெளியிடப்பட்ட 02/2026 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு உட்பட்டதாக இருக்கும்

| திட்டத்தின் பெறுமதி (ஐ.அ.டொ. மில்லியன்) | திட்டத்தின் பெயர் | பதவிப் பெயர் | *02/2026* ஆம் இலக்க முகாமைத்துவ சேவை திணைக்கள சுற்றறிக்கைக்கு ஏற்ப குறிப்பிடப்பட்டது | வெற்றிடங்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| *25* மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மேற்பட்ட மற்றும் *200* மில்லியன் அமெரிக்க டொலர்களைப் பார்க்கிலும் குறைந்த அல்லது அதற்கு சமமான வகுதி | பதுளை செங்கலடி வீதி மேம்பாட்டுத் திட்டம் | மீள்குடியேற்ற உதவியாளர் (Resettlement Assistant) | MN 4-2025 53,060 -2x800- (தொடக்க நிலை – உப பிரிவு III) மற்றும் MN 2-2025 48,470-2x540 - (தொடக்க நிலை- உப பிரிவு III) | 01 |

Gazette.lk

**மேலே குறிப்பிடப்பட்டுள்ள 02/2026 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை திணைக்கள சுற்றறிக்கையின் படி, மீள்குடியேற்ற உதவியாளர் (உதவி ஊழியர்) MN 4-2025/ MN 2-2025 அடிப்படைத் தகுதிகள் கீழே தரப்பட்டுள்ளன**

## 01. <u>மீள்குடியேற்ற உதவியாளர் (MN-4 - 2025)</u>

- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொடர்புடைய துறையில் இளமானிப் பட்டத்தை வெற்றிகரமாக முடித்திருத்தல்.
  அத்துடன்
- தொடர்புடைய துறையில் 02 வருட அனுபவம் (அதே பதவி)

## 02. <u>மீள்குடியேற்ற உதவியாளர் (MN-2 - 2025)</u>

- க.பொ.த. (சா/த) பரீட்சையில் மொழி மற்றும் கணிதம் பாடங்கள் மற்றும் 2 பாடங்கள் உட்பட (4) திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறு (6) பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும் .

மற்றும்

- க.பொ.த. (உ/த) பரீட்சையில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருக்க வேண்டும் .

அத்துடன்

- தொடர்புடைய துறையில் 02 வருட அனுபவம் (அதே பதவி)

<u>பொதுவான நிபந்தனைகள்:</u>

- ஆட்சேர்ப்பு, சம்பளம், நன்மைகள் மற்றும் பிற சேவை நிபந்தனைகள் நிதி அமைச்சினால் *2026.03.28* ஆந் திகதி வெளியிடப்பட்ட *02/2026*ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் படியாகும்.
- தெரிவுகள் ஒரு கட்டமைக்கப்பட்ட நேர்காணல் மற்றும் ஏனைய சுற்றறிக்கை நிபந்தனைகளின் அடிப்படையில் இருக்கும்.
- அனைத்து விண்ணப்பங்களும் இந்த சுற்றறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள வடிவமைப்பின்படி நிரப்பப்பட வேண்டும் என்பதோடு , தொடர்புடைய ஆவணங்களின் அனைத்து பிரதிகளும் அனுப்பப்பட வேண்டும்.
- தேர்வு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் , தேவையெனில் சம்பந்தப்பட்ட பகுதி மற்றும் / அல்லது நாட்டின் எந்த இடத்திலும் பணியாற்ற சம்மதிக்க வேண்டும்.

Gazette.lk

*01.* **வயது வரம்பு:**

- அரச, பகுதியளவு அரச உத்தியோகத்தர்களுக்கு *60* வயதிற்கு கீழ்
- ஏனையவர்களுக்கு *64* வயதிற்கு கீழ்

*02.* **சம்பளம்:**

சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் நிதி , திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் வெளியிடப்பட்ட *02/2026* ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையின் அடிப்படையில் வழங்கப்படும்.

*03.* **வேலைவாய்ப்பு விதிமுறைகள்:**

- இந்த நியமனம் ஒப்பந்த அடிப்படையிலானது , ஆரம்பத்தில் ஒரு வருட காலத்திற்கானது. சேவைத் தேவைப்பாடுகள் மற்றும் செயலாற்றுகை அடிப்படையில் சேவை நீடிப்பு கருத்திற்கொள்ளப்படலாம்.

- விண்ணப்பதாரர் ஏற்கனவே அரச சேவை , மாகாண அரச சேவை , உள்ளூராட்சி மன்றங்கள் , அரச கூட்டுத்தாபனங்கள் , நியதிச்சட்ட சபைகள் அல்லது முழுமையாக அரசுக்கு சொந்தமான நிறுவனங்கள் ஆகியவற்றில் நிரந்தர பதவியில் இருந்தால் , *02/2026* ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையில் பத்தி *2.3.3* இல் குறிப்பிடப்பட்டுள்ள, நிலையான பதவியின் நியமன அதிகாரியால் பரிந்துரைக்கப்பட்ட மற்றும் பரிசீலிக்கப்படும் சரியான விடுவிப்பு அடிப்படையில் நியமனம் வழங்கப்படும்.

- விண்ணப்பத்தை முறையாகப் பூர்த்தி செய்யாத மற்றும் விண்ணப்பத்துடன் சரியான தகவல்களை சமர்ப்பிக்காத வேட்பாளர்கள் , மற்றும் *02/2026* ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகள் மற்றும் பிற தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யாதவர்கள் நியமனங்களுக்காக கருத்திற்கொள்ளப்பட மாட்டார்கள்.

- நியமனங்களை வழங்குதல் அல்லது வழங்காதிருத்தல் மற்றும் சேவை நீடிப்புகள் குறித்த முடிவு சுற்றறிக்கைகள் மற்றும் ஏனைய ஏற்பாடுளின்படி அமைச்சின் செயலாளரின் தற்றுணிபின் படியானதாகும்.

*04.* **நிறுவனத் தலைவரின் பரிந்துரை**

அரச/பகுதியளவு அரச நிறுவனங்களில் ஏற்கனவே நிரந்தரப் பதவியை வகிக்கும் விண்ணப்பதாரர், அவர்களின் நிறுவனத் தலைவர் மூலமாகவும் , *02/2026* ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையின் பத்தி *2.3.3* இன் படி , நிலையான பதவியிலிருந்து விடுவிக்கப்படுவதற்கான அங்கீகாரத்துடனும், விடுவிப்பு அடிப்படையில் பரிந்துரையுடனும் விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும் . ( இல்லாதபட்சத்தில், அந்த விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.)

*05.* **விண்ணப்பத்தை சமர்ப்பித்தல்**

Gazette.lk
SINCE 2016
AMBITIONS REALIZED

கீழே கொடுக்கப்பட்டுள்ள படிவத்தின்படி முறையாக நிரப்பப்பட்ட விண்ணப்பங்கள் , கல்வித் தகுதிகள், அடிப்படை பட்டத்தின் பிரதி , பணி அனுபவம் மற்றும் ஏனைய தொடர்புடைய தகவல்களுடன், கடித உறையின் மேல் இடது மூலையில் விளம்பரத்தில் உள்ள பதவி மற்றும் கருத்திட்டத்தின் பெயரைக் குறிப்பிட்டு , பதிவுத் தபாலில் செயலாளர் , போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு , " மகனெகும மகமெதுர ", இல.216, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை , கொஸ்வத்த, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு 2026.09.17 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும்.

**06. விசேட கவனத்திற்கு**

- **தரப்பட்டுள்ள படிவத்தின்படி முறையாக நிரப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.**
- **விண்ணப்பத்துடன் சான்றிதழ் பிரதிகளைச் சமர்ப்பித்த தகைமைகள் மட்டுமே தெரிவுக்காக கவனத்திற் கொள்ளப்படும்**

**07. ஏதேனும் விசாரணைக்கு தயவுசெய்து பின்வரும் இலக்கத்தை தொடர்பு கொள்ளவும் - 011-2271048**

**08. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில ஊடகங்களில் வெளியிடப்பட்ட இந்த விளம்பரத்தின் மொழி சொற்றொடர்களுக்கு இடையில் ஏதேனும் முரண்பாடு இருந்தால் , சிங்கள விளம்பரத்தில் உள்ள விடயங்களே மேலோங்குதல் வேண்டும்**

உதவி ஊழியர்களுக்கான விண்ணப்பப் படிவம் – இணைப்பு 1

**செயலாளர்**
**போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு**

Gazette.lk